# தூதன்

தூதன்-29 நவம்பர் - 2020 தூது-11

நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். மத்தேயு 18:33, 34




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 03 |
| உதவி ஆயரம்மா மடல் – ஃபுஜைரா | 05 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 07 |
| உதவி ஆயரம்மா மடல் – இராஸ் அல் கைமா | 09 |
| செயலர் மடல் | 11 |
| நற்செய்தியில் நடந்தது! ஆதியாகமத்தில் சொன்னது!! | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 13 |
| அறிந்து கொள்வோம் | 14 |
| திருச்சபை ஜெபநாள் | 16 |
| அன்னாள் | 18 |
| தெரிந்துகொள்வோம் | 20 |
| வேதவினா போட்டி | 21 |
| Health Tips | 23 |
| Children’s Corner | 27 |
| Birthday Celebrants | 31 |
| Wedding Anniversary | 34 |
| City of David | 35 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற திருப்பெயரில் துபாய் தமிழ்த் திருச்சபையின் இறைமக்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். ஆண்டவரின் பேரருளால் மீண்டும் ஒரு புதிய மாதத்தைக் காண நம் வாழ்வைத் தொடர்ந்திட பெற்ற வாய்ப்பை எண்ணி மகிழ்ந்து நாம் ஆண்டவரைப் போற்றுவோம். இந்த Covid-19 பேரிடர் காலத்தில் நாம் பெற்றுக் கொள்கின்ற ஒவ்வொரு நாட்களும் ஒரு புதிய கிருபையின் அனுபவமே. நாம் நிற்பதும் நிர்மூலமாகாமல் இருப்பதும் நம் ஆண்டவரின் பேரருளால் மட்டுமே என்பதை உள்ளத்தில் உணர்ந்து ஒவ்வொரு நிமிடமும் ஆண்டவரைத் துதிப்போம்.

இந்த மாதத்திற்கான இறை வார்த்தை: 1பேதுரு 5:10
சிறிது காலத் துன்பங்களுக்குப் பின் அவர் உங்களைச் சீர்ப்படுத்தி உறுதிப்படுத்தி வலுப்படுத்தி நிலை நிறுத்துவார்.
After you have suffered a little while restore you and make you strong firm and steadfast.

முதல் நூற்றாண்டில் மானுடம் பெற்ற அளப்பரிய ஆண்டவரின் அருட்கொடை திருச்சபை. ஆண்டவரின் திருஉடலாக இயேசுவின் மணவாட்டியாக இந்த மண்ணுலகில் ஆண்டவரால் நிறுவப் பெற்ற திருச்சபை எதிர்கொண்ட துன்பங்களும் சவால்களும் பாடுகளும் அவமானங்களும் வார்த்தையில் விளக்கிட இயலாத துன்பியல் அனுபவங்களாகும். இத்தகைய சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த துவக்க காலத் திருச்சபையின் ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் அவர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி தொடர்ந்து கிறிஸ்துவுக்காக சான்று பகர்ந்திட தூய பேதுரு அப்போஸ்தலரால் எழுதப்பட்டதே 1,2 பேதுருவின் கடிதங்கள்.

### 1. நம்மைச் சீர்படுத்தும் ஆண்டவரை விசுவாசித்து பற்றிக் கொள்வோம்:

பேதுரு திருச்சபைக்கும், விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கும் முதல் நம்பிக்கையின் வார்த்தை. நாம் ஆராதிக்கும் ஆண்டவர் நம்மையும், நம் வாழ்வையும், நம்முடைய வாழ்வின் கடினமான சூழல்களையும் சீர்படுத்தி செம்மையாக்கின்றவர். ஆமோஸ் 9:12 வசனத்தில் ஆண்டவர் நம் வாழ்வைச் சீரமைக்கும் முறைமையின் சிறப்பான அம்சங்களை நாம் காணலாம். "அந்நாளிலே விழுந்து போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து அதின் திறப்புகளை அடைத்து அதில் பழுதாய்ப் போனதைச் சீர்ப்படுத்தி பூர்வ நாட்களில் இருந்தது போல அதை ஸ்தாபிப்பேன்" என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் சீரமைக்கப்படவேண்டிய காரியங்கள், நம்முடைய குடும்ப வாழ்வில் மாற்றியமைக்கப்பட வேண்டிய காரியங்கள் ஒவ்வொன்றையும் அதினதின் காலங்களில் மிக நேர்த்தியாய் செய்து முடிக்கும் ஆண்டவர் நம்முடன் இருக்கிறார். ஆகையால் ஆண்டவரே என் வாழ்வையும், என் குடும்பத்தையும் உம்முடைய திருவுள சித்தத்தின்படி சீர்படுத்தி செம்மையாக்கும், நான் விசுவாசத்துடன் உம்மைத் தொடர்ந்து பின் செல்வேன் என்று நம்மை அர்ப்பணிப்போம்.

### 2. நம்மைப் பெலப்படுத்தும் ஆண்டவரிடத்தில் ஜெபத்தில் காத்திருப்போம்:

பேதுரு திருச்சபைக்கும், விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கும் இரண்டாவது நம்பிக்கையின் வார்த்தை. நாம் வழிபடும் ஆண்டவர் நம்முடைய வாழ்வின் பாதைகளில் நம்மைப் பெலப்படுத்துகின்றவர் என்பதுதான் 2 நாளாகமம் 20:3,12,15. இந்த மூன்று வசனங்களிலும் யோசபாத் அரசன் அம்மோனியரும் மோவாபியரும் படையெடுத்து வந்து முற்றுகை போட்ட தருணத்தில் செய்வதறியாமல் திகைத்து நின்ற போது, தன் தேசமெங்கும் உபவாசத்தைக் கூறி அறிவித்தான். சோர்ந்து போன வேளையில் கர்த்தருக்குள் தன்னையும் இஸ்ரவேல் மக்களையும் ஜெபத்தினால் ஒன்றிணைக்கிறார். “இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை, நாங்கள் செய்ய வேண்டியது இன்னது என்று எங்களுக்குத் தெரியவில்லை, ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது”. இந்த ஜெபத்தைச் செய்ததற்குப் பின்னர் கர்த்தர் லேவியனாகிய யகாசியேல் என்பவரின் மூலமாக தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தி, இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது என்று வெற்றிச் செய்தியை அறிவிக்கிறார். ஆண்டவருக்குள் நாம் ஜெபத்தில் உறுதியாயிருக்கும் போது நம்முடைய பாடுகளையும் உபத்திரவங்களையும் ஆண்டவர் ஏற்றுக் கொண்டு சோர்ந்து போன நம்மை அவர் பெலப்படுத்துகிறார்.

### 3. நம்முடைய ஆண்டவரின் கரங்களில் அடங்கியிருப்போம்:

பேதுரு திருச்சபைக்கும் விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கும் மூன்றாவது நம்பிக்கையின் வார்த்தை. நம்முடைய ஆண்டவர் நம்முடன் இருந்து நம்மைப் பெலப்படுத்துகிறவர் மட்டுமல்ல, நம்மை உறுதிப்படுத்தி நிலைநிறுத்துகின்ற ஆண்டவர். 1 இராஜாக்கள் 17-ம் அதிகாரத்தில் எலியாவின் வாழ்வில் நடந்த நிகழ்வை நாம் வாசிக்கலாம். ஆகாப் ராஜாவிடத்தில் என்னுடைய வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களில் பனியும்,மழையும் பெய்யாதிருக்கும் என்று மிகத் தைரியமாய் கூறி விட்டு கடந்து செல்லும் எலியாவை ஆண்டவர் வழிநடத்தும் விதங்கள் மிகவும் அதிசயமானவையாக உள்ளதை நாம் பார்க்கலாம். கேரீத் ஆறு வற்றிப்போகும் வரையிலும் அதின் நதிக்கரையில் விசுவாசத்துடன் அடங்கியிருந்த எலியாவுக்குக் கடவுள் காகங்களின் மூலம் அப்பமும்,இறைச்சியும் தினமும் தந்து வழிநடத்தி வந்தார். கேரீத் ஆறு வற்றிய பிறகோ “சாறிபாத்” ஊரில் பஞ்சத்தினால் இனி மரிக்க வேண்டியது தான் என்ற வறுமை நிலையில் வாழ்ந்த விதவைத்தாயின் மூலமாய் அந்த பஞ்சகாலம் முடியும் வரையிலும் ஆண்டவர் எலியாவின் மூலமாய் அந்த விதவையின் குடும்பமும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டது, எலியாவும் அந்தக் குடும்பத்தினால் ஆதரிக்கப்பட்டார். ஆகாப் ராஜாவுக்கு முன்பாக சீறிப்பாய்ந்த தேவனுடைய மனுஷனை ஆண்டவர் கேரீத் ஆற்றங்கரையிலும், சாறிபாத் விதவையின் ஊரிலும் அடங்கி நடக்கச் செய்து எலியாவின் வாழ்வையும், விசுவாசத்தையும் சீர்ப்படுத்தி, உறுதிப்படுத்தினார். அந்த நல்ல ஆண்டவர் நம்முடைய வாழ்வையும் சீர்ப்படுத்தி, பெலப்படுத்தி, உறுதிப்படுத்தி, நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறார்.

ஆண்டவரின் கிருபை இந்தப் புதிய மாதத்திலும் நம்முடன் தொடர்ந்து தங்கி இருந்து வழி நடத்துவதாக.!

ஆண்டவரின் திருப்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# உதவி போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! நேற்றும் இன்றும் என்றும் மாறாத நமதாண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த நாட்களிலெல்லாம் நம்மைப் பாதுகாத்து, போஷித்து, பராமரித்து வந்த தேவாதி தேவன், இந்தப் புதிய மாதத்திலும் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு வந்துள்ளோம். இன்னும் முழுமையாக இந்நெருக்கடி நிலை மாற தொடர்ந்து ஜெபிப்போம். கர்த்தர் மாற்றுவார்.

## நெருக்கடி நிலை

இப்போது நாம் அனுபவிக்கும் நெருக்கடி நிலையைப் போன்ற சூழ்நிலைகள் பரிசுத்த வேதாகமத்திலும் நிறைய இருந்திருக்கின்றன. அவற்றிலிருந்து மக்கள் எப்படி விடுபட்டனர் என்பது பற்றித் தொடர்ந்து தியானிக்கலாம்.

## காலியான கலசம் ( 1இராஜாக்கள் 17:8-16)

தேவனாகிய கர்த்தர் தீர்க்கதரிசியான எலியாவின் வாழ்வில் செய்த அற்புதமான விஷயங்களை நோக்கிப் பார்த்தால் தேவனது ஆச்சரியமான செய்கைகள் நமக்குப் புலப்படும். இந்த வேதபகுதியிலும், தேசத்தில் பனியும் மழையும் பெய்யாமல் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அச்சூழலில் தேவன் எலியாவை முதலில் கேரீத் ஆற்றண்டையில் தங்கியிருக்கச் செய்தார். அங்கு காகங்களால் எலியாவைப் போஷித்தார். பின்பு சாறிபாத் என்னும் ஊருக்குப் போகச்சொன்னார். அங்கு ஒரு விதவை மூலம் எலியாவைப் போஷிக்கத் தேவன் ஏற்பாடு செய்திருந்தார். அந்த விதவையின் நிலைமையே மோசமானதாக இருந்தது. ஆனாலும் தேவாதி தேவன் மிக மோசமான சூழ்நிலைகளையும் மாற்ற வல்லவர் என்பதை இந்த நிகழ்வின் மூலம் அறியலாம்.

### 1.தளர்வற்ற நிலை - Hopeless Predicament:

அந்த விதவையின் நிலைமை மிக மோசமாயிருந்தது. மிகத் தளர்வுற்ற நிலையில் அந்த விதவை இருந்தார். அவர் பெண் மட்டுமல்ல விதவையும் கூட. சமூகத்தில் ஆணின் துணையின்றி ஒரு பெண் தனியே வாழ்வது மிகக் கடினமானது. அது மாத்திரமல்ல, அப்பெண் தனியேயும் இல்லை. அவருடன் அவரின் குமாரனும் உள்ளான். அந்த எளிய விதவை தனக்கும் தன் மகனுக்கும் சேர்த்து சம்பாதிக்க வேண்டும். கடினமான நிலை.

எலியா கேட்டது கொஞ்சம் அப்பம் மட்டுமே. அதைக்கூட அந்த விதவையால் கொடுக்க முடியாத அளவுக்கு அவரது நிலைமை மிக மோசம். இதுபோன்ற மிக மோசமான சூழ்நிலை இன்றும் நம் வாழ்வில் இருக்கலாம். இந்த நெருக்கடியான கால கட்டத்தில் அநேகர் மிகத் தளர்வுற்ற நிலையில் இருக்கிறார்கள். ஆனால் ஒன்று இந்த நிலைமை மாறக்கூடியது. தேவாதி தேவன் இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையையும் மாற்ற வல்லவர்.

## 2. தெய்வீக நியமம் - Heavenly Provision:

அந்த விதவை தேவ வார்த்தைகளுக்குக் கீழ்படிந்தார். ஆகவே தேவன் அவரில் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். அந்த விதவையும் அவள் வீட்டாரும் அனேக நாள் சாப்பிட்டார்கள். பானையில் மா செலவழிந்து போகவுமில்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவுமில்லை. தேவன் இதை எப்படிச் செய்தார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் தேவன் செய்து முடித்தார். ஆச்சரியமானது. இன்றும் தம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தமது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களின் வாழ்க்கையில் அற்புதமான, ஆச்சரியமான நன்மைகளை விளையச்செய்வதிலே தேவன் அற்புதராயிருக்கிறார்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு.ஜான் வெஸ்லி
உதவி ஆயர் - ஃபுளைரா.

| திருமறைப் பாட ஒழுங்குகள் - நவம்பர் 2020 | | | | | |
|---|---|---|---|---|---|
| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
| 06-11-2020 | பிள்ளைகளைப் பேணி வளர்த்தல் | நீதி. 23:15-25 | எபேசியர் 6:1-8 | மத்தேயு 18:1-6 | 127 |
| 13-11-2020 | மண் பாண்டத்தில் செல்வம் | மீகா 6:1-8 | 2கொரிந். 4:7-15 | மாற்கு 4:30-34 | 106:1-12 |
| 20-11-2020 | பெண் குழந்தைகள் சிறப்பு நாள் | 2இராஜா. 5:1-6 | அப்போ. 12:11-17 | மாற்கு 5:21-24; 35-43 | 8 |
| 27-11-2020 | வருகையின் முதல் வெள்ளி | எரேமியா 33:11-16 | 1தெசலோ. 3:6-13 | லூக்கா 1:39-45 | 68:11-20 |

# உதவி ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று வாக்கு பண்ணி நம்மை நடத்தி வருகின்ற நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் நம்மைக் கண்மணிபோலப் பாதுகாத்து நடத்திவந்த கர்த்தர்தாமே, இந்தப் புதிய மாதத்திலும் நம்மைப் பாதுகாத்து நடத்துவாராக. இந்த நாட்களில் தேவனையே தேடுவோம். அவரே நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருந்து நம்மை என்றும் நடத்த வல்லவராயிருக்கிறார். அவரையே நம்பி வாழ்வோம்.

## உயிரோடிருக்கையில்...

மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில்
நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும்
மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன். பிரசங்கி 3:12

I know that there is no good in them, but for a man to rejoice,
and to do good in his life. Eccelesiastes 3:12

ஒரு ஊரில் மிகப்பெரும் செல்வந்தன் ஒருவன் வாழ்ந்து வந்தான். மிகப்பெரும் சொத்துக்களுக்குச் சொந்தக்காரனாயிருந்த அவன், தனது வாழ்க்கைக்குப் பிறகு தனது சொத்துக்கள் அனைத்தையும் தன் கிராம மக்களுக்குத் தான தர்மமாகக் கொடுக்கப்போகிறேன் என்று அறிவித்து வாழ்ந்து வந்தான். ஆனாலும் அக்கிராம மக்கள் யாரும் அவனை மதிக்காமல் குறை கூறிக்கொண்டே இருந்தார்கள். இதனை அறிந்த அந்த செல்வந்தனுக்கு மிகவும் வருத்தமாகவும், வேதனையாகவும் இருந்தது. நாம் இவ்வளவு தூரம் நமது மரணத்திற்குப் பிறகு நமது செல்வத்தையெல்லாம் மக்களுக்குத் தானம் செய்வதென்று அறிவித்தும் இம்மக்கள் நம்மை மதிக்கவில்லையே, நம்மைக் குறைகூறுகிறார்களே என்று மனமுடைந்துபோன அந்த செல்வந்தன், துறவி ஒருவரிடம் சென்று இதற்கான காரணத்தை அறிய விரும்பினான்.

துறவியைப் பார்த்தவுடன் அந்த செல்வந்தன், “ஐயா, நான் மிகப்பெரும் செல்வந்தன். எனக்கு ஏராளமாய் சொத்துக்கள் இருக்கிறது. என் மரணத்திற்குப் பிறகு என் அனைத்து சொத்துக்களையும், செல்வங்களையும் என் கிராமத்து மக்கள் அனைவருக்கும் தானமாகக் கொடுப்பேன் என்று தீர்மானித்துள்ளேன். இதனை என் கிராம மக்களும் நன்றாக அறிவார்கள். ஆனாலும் அவர்கள் என்னை மதிப்பதில்லை, என்னைக் குறைகூறுகிறார்கள். இது எனக்கு மிகவும் மனவேதனையாக

உள்ளது. இதற்கு நீங்கள்தான் ஒரு தீர்வு கூறவேண்டும்.” என்று கேட்டுக்கொண்டான். இதனைக் கேட்ட துறவி, உனக்கு பன்றி-பசு கதை தெரியுமா என்று கேட்டார். உடனே செல்வந்தன் அது என்ன பன்றி-பசு கதை எனக்குச் சொல்லுங்கள் என்றான். துறவி, “ஒருமுறை பன்றி ஒன்று பசுவிடம் சென்று நீ மக்களுக்குப் பால் மட்டும்தான் தருகிறாய், நானோ என் மாம்சத்தையே அவர்கள் புசிப்பதற்குத் தருகிறேன். ஆனாலும் மக்கள் என்னைப் புகழாமல் உன்னையே புகழுகிறார்கள் ஏன்? என்று கேட்டது. அதற்குப் பசு நான் உயிரோடிருக்கும்போது அவர்களுக்குத் தருகிறேன். ஆனால் நீயோ இறந்த பிறகுதான் தருகிறாய். இதுதான் வித்தியாசம் என்றது.” என்று சொன்னார். பிறகு அந்தத் துறவி, அந்த செல்வந்தனிடம் நீயும் அந்த பசுவைப்போல உயிரோடிருக்கும்போது நன்மை செய்தால் மக்கள் உன்னைப் புகழுவார்கள் என்று கூறினார்.

அன்பானவர்களே! நமது பரிசுத்த வேதாகமும் இதைத்தான் கூறுகின்றது. பிரசங்கி 3:12-ல் உயிரோடிருக்கும்போது நன்மை செய்வதுதான் மனிதருக்கு நியமிக்கப்பட்டுள்ள நியமம் என்கிறது. நாளைக்கு இதனைச் செய்வேன் என்று வீண் ஜம்பம் அடிக்காமல், இன்றைக்கு நாம் என்ன செய்கிறோம் என்பதனை எண்ணிப் பார்க்கவேண்டும். நாளை நடப்பது நமக்குத் தெரியாதே. ஆகவே இன்று நமக்குக் கிடைத்துள்ள நேரத்தை மற்றவர்களுக்குப் பிரயோஜனமாகப் பயன்படுத்தவேண்டும். இன்றைக்கு நம் ஆகாரத்தைத் தண்ணீர்மேல் போட்டால் அநேக நாட்களுக்குப்பின் அதின் பலனைக் காணமுடியும். இன்றைய நன்மை மிக முக்கியமானது. ஆகவே இன்று கர்த்தருக்குப் பிரியமாய் வாழ்ந்து நன்மை செய்வோம்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஏஞ்சலின் ரூபா ஜான் வெஸ்லி
உதவி ஆயரம்மா - ∴.புளைரா.

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபை செயற்குழு அங்கத்தினர்
Mr. Jose Albin அவர்களின் தகப்பனார்
Mr. Thangappan அவர்கள் கடந்த 10-10-2020 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mrs. Jane Carol Sam Isaac அவர்களின் தாயார்
Mrs. Selvabai Manohar அவர்கள் கடந்த 26-10-2020 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# உதவி போதகர் மடல்

கிருபையும் இரக்கமும் உள்ளவரான இயேசுகிறிஸ்துவை ஸ்தோத்தரிப்போம். இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புதிய மாதத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சர்வ வல்லமையுள்ளவரான கடவுள், இவ்வருடத்தின் பத்து மாதங்களின் ஒவ்வொரு நாளும் நமக்கு உதவியாக இருந்தார். நவம்பர் மாதத்தில் நன்றியுடன் இரட்சகரை ஸ்தோத்தரித்து, அவரிடம் நம்மை ஒப்படைத்து வாழ்வோம். கர்த்தர் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வதிப்பார். ஜெபத்துடன் கர்த்தரின் வசனம் தியானிப்போம்.

தியான உரை தலைப்பு : கர்த்தர் கிருபையுள்ளவர்

திருமறைப்பாடம் : சங்கீதம் 103:1-13 தியான வசனம் : சங்கீதம் 103:4

"கர்த்தர் உன்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டுவார்"

"The Lord crowns you with Loving kindness and tender mercies."

"கிருபை" என்பது கர்த்தருடைய அளவு கடந்த அன்பு என்பது உண்மை ஆகும். அது நமது தகுதிக்கு மேலாக தேவன் நம்முடன் இடைபடும் விதமாகும். கடவுள் கிருபையில் தலைசிறந்தவர். கிருபையால் செயல்படுகிறார். கிருபையே சங்கீதம் 103-ல் காணப்படும் முதன்மையான கருப்பொருளாகும்.

சங்கீதம் 103:3-5 வசனங்களில் கடவுள் தமது கிருபையினால் செய்யும் செயல்களையெல்லாம் சங்கீதக்காரனாகிய தாவீது குறிப்பிடுகிறார். கர்த்தரின் கிருபையின் ஈவுகளை இந்த வசனங்களிலிருந்து தியானிப்போம்.

1. கர்த்தர் கிருபையினால் மன்னிக்கிறார் (சங்கீதம் 103:3a) "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து," "Lord forgives all your iniquities."

கர்த்தருடைய மன்னிப்பு அளவிடமுடியாதது. "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்" (சங்கீதம் 103:12).

பாவ மன்னிப்பே மனிதனுடைய அடிப்படைத்தேவை. கடவுள் நம்முடைய பாவத்தை மன்னிக்கும்போது, உறுத்திக்கொண்டிருக்கும் மனசாட்சியும், குற்ற உணர்வும் நம்மைவிட்டு அகன்று போய்விடும்.

கிருபையின் மூலமாய் கிடைக்கும் பாவமன்னிப்பு விலைமதிக்க முடியாதது. இதுவே கடவுளிடமிருந்து எந்த ஒரு மனிதனும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலையேறப்பெற்ற ஈவாகும். பாவமன்னிப்பு ஒரு தொடர்ச்சியான அனுபவம்.

அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார் என்று ஏதோ ஒருமுறை அறிவது மட்டும் போதாது. கடவுளுடைய மன்னிப்பில் நாம் தொடர்ந்து நடக்க கற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தர் தமது கிருபையினால் நமது பாவங்களை மன்னித்தார் என்ற மகிழ்ச்சியுடன் அவருக்கு சான்று பகர்ந்து வாழ்வோம்.

### 2. கர்த்தர் கிருபையினால் குணப்படுத்துகிறார். சங்கீதம் 103:3b

"உன் நோய்களையெல்லாம் குணமாக்கி," "Lord, heals all your diseases."

வியாதியின் வல்லமையிலிருந்து நமக்கு நிச்சயமாகவே விடுதலை அளிக்கிறார். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது, ஆவி, ஆத்துமா, சரீரம் யாவும் முழுமை பெறுகின்றன. யாத்திராகமம் 15:26-ல் "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்." என்று கர்த்தர் தம் மக்களாகிய இஸ்ரவேலருக்கு வாக்களித்தார்.

பெலவீனத்தில் உடனடியாக குணம் அளித்தோ அல்லது படிப்படியாக குணமளித்தோ கர்த்தர் கிருபையால் செயல்படுகிறார். பவுலின் சரீரத் தேவையில், "என் கிருபை உனக்குப் போதும்" (2 கொரிந்தியர் 12:9) என்று இயேசு கூறினார். நம்முடைய வாழ்விற்கும் கடவுள் கிருபையால் நம்மை பெலன் அருளி ஆசீர்வதிப்பார்.

### 3. கர்த்தர் தமது கிருபையினால் கரிசனை கொள்கிறார் (சங்கீதம் 103:4)

"உன்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டி" "The Lord crowns you with loving kindness and tender mercies."

கர்த்தருடைய இயல்புகளில் மாறாத அன்பு, மாறாத இரக்கம் ஆகிய இரண்டு இயல்புகள் இச்சங்கீதத்தில் அடிக்கடி கூறப்படுகின்றன. அவருடைய கிருபை அளவற்றது (சங்.103:11). அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது (சங்.103:17). சில வேளைகளில் கர்த்தர் நம்மைப் பரிவுடனும், பட்சத்துடனும் கண்ணோக்குகிறார். நாம் தோல்வியுறும்போது நம் நோக்கங்களைப் புரிந்துகொள்கிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டி நம்மை ஆசீர்வதிப்பவர். அவருடைய கரங்களில் நம்மை அர்ப்பணித்து வாழ்வோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்கள் ஒவ்வொருவரையும் இந்த புதிய மாதத்திலும், தொடர்ந்துள்ள வாழ்விலும் பாதுகாத்து ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர் - RAK.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். அக்டோபர் மாதம் வரையிலும் நம்மைப் பத்திரமாகப் பாதுகாத்து பராமரித்து வந்த கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். புதிய மாதமாகிய நவம்பர் மாதத்திலும் நமக்கு வேண்டிய பாதுகாப்பை அருளுவதற்காக தொடர்ந்து ஜெபிப்போம்.

## லவோதிக்கேயா சபை

திருமறைப்பாடம்: வெளி. 3:14-22

### லவோதிக்கேயா நகரம்:

லவோதிக்கேயா நகரம் கொலோசே பட்டணத்திற்கு மிக அருகிலுள்ள நகரம் ஆகும். எபேசு பட்டணத்தினின்று நூறுமைல் தூரத்திலும், பிலதெல்பியா பட்டணத்திலிருந்து தென்கிழக்காக நாற்பத்துமூன்று மைல் தூரத்திலும் லவோதிக்கேயா பட்டணம் அமைந்துள்ளது. அந்தியோகியா என்பவர் இப்பட்டணத்தை ஆட்சி செய்தார். அவருடைய மனைவியான லவோதியாவின் பெயரால் இந்த பட்டணம் லவோதிக்கேயா பட்டணம் என்று பெயர் சூட்டப்பட்டது.

### லவோதிக்கேயா நகரத்தின் சிறப்பு:

செல்வச்செழிப்பு நிறைந்த பட்டணமாக விளங்கியது. கம்பளி நூலும், ஆடைகளும் இப்பட்டணத்தின் சிறப்பு. உலகம் முழுவதும் உள்ள நாடுகளுக்குக் கம்பளி ஆடைகள் ஏற்றுமதி செய்தனர். கம்பளி ஆடை நிறுவனங்களும் அதிகமாக காணப்பட்டன. இது இப்பட்டணத்திற்கு அதிகமாக செல்வத்தைக் கொண்டு வந்தது. நீராடல் மேற்கொள்ளும் நீரூற்றுகள் அதிகமாக இப்பட்டணத்தில் காணப்பட்டது. எனவே இப்பட்டணம் சுகவாசஸ்தலமாகவும் விளங்கியது.

Askelipos (ஆஸ்கலிப்போஸ்) என்னும் பெயர் கொண்ட மருத்துவக் கல்லூரி ஒன்று காணப்பட்டது. கண் மருத்துவத்தில் சிறந்து விளங்கியது. இவர்கள் தயாரித்த கண்களிம்பு கண் சிகிச்சைக்குச் சிறப்பு சேர்த்தது.

### லவோதிக்கேயா திருச்சபை

வளமையில் நிறைந்திருந்த வாழ்வியல் அடிப்படையில் "செழுமைக் கொள்கை" திருச்சபையைப் பற்றிக்கொண்டிருந்தது. கிறிஸ்துவின் மீது உள்ள நம்பிக்கை உறுதியற்ற நிலையில் காணப்பட்டது. கிறிஸ்துவை மறந்து உலகம், உலகச்செழுமை நிறைந்த வாழ்வியல் நம்பிக்கை உடையவர்களாய் வாழ்ந்து வந்தனர்.

### கர்த்தரைச் சார்ந்து வாழ அழைப்பு:

திருச்சபை உண்மைநிலை கர்த்தரால் உணர்த்தப்படுகிறது. “நீ குளிரும் அல்ல, அனலும் அல்ல, நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்” (வெளி.3:15) என்பதைக் கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். இப்படி வாழ்வதால் கர்த்தர் அவர்களை வாந்தி பண்ணிவிடுவேன் என்று கூறுகிறார். ஆகவே உலக சார்பை விட்டுவிட்டு கர்த்தரைச் சார்ந்து வாழ அழைப்பு விடுக்கிறார்.

எங்களுக்குச் செல்வம் உண்டு, வளமையாக வாழ்கிறோம், ஒரு குறைவுமில்லை என்று வாழ்ந்து வந்தார்கள். இத்தகைய எண்ணம் அவர்களுக்குக் காணப்பட்டதால் அவர்களது வறிய, பார்வையற்ற, ஆடையற்ற நிலையினை சுட்டிக்காட்டுகிறார் (வெளி.3:17). ஆகவே அவர்கள் நிலையினை உணர்ந்து கர்த்தரிடம் திரும்ப அழைப்பு விடுக்கப்படுகிறது.

### மனந்திரும்ப அழைப்பு:

நெருப்பினால் புடமிடப்பட்ட பொன்னையும், புதுப்பித்தலை அடையாளப் படுத்தும் வெண்ணாடையையும், பார்வைபெறும்பொருட்டு கண்ணிற்கு மருந்தையும் பெற கிறிஸ்து தேவை என்பதை அவர்கள் உணரவில்லை. கிறிஸ்துவின் அன்பை இறைவாக்கின் கண்டிப்பின் மூலம் உணர்ந்து மனம்திரும்ப வேண்டும். “இதோ, வாசற்படியில் நின்று தட்டுகிறேன்” (வெளி. 3:20) என்கிறார். கர்த்தரை விட்டுத் தூரம் போகும்போது கர்த்தர் தம் மக்களுக்கு அவரிடம் திரும்ப வாய்ப்பு கொடுக்கின்றார். அதற்காகக் காத்து நிற்கிறார்.

லவோதிக்கேயா சபையார் தங்களுக்கு இருக்கும் செல்வமும், நல்ல வாழ்வும் நிலையானது என நம்பிக்கொண்டிருந்தனர். ஆனால் கர்த்தரே நிலையானவர், அவர் தருகின்ற வாழ்வே நிலையானது என தெளிவுபடுத்துகின்றார்.

ஆம் அன்புக்குரியவர்களே, கர்த்தரிடமிருந்து வருகிற ஐசுவரியமே மெய்யான ஐசுவரியம். கர்த்தர் தரும் ஐசுவரியம் நிலைத்து நிற்கும் என்பதை லவோதிக்கேயா திருச்சபையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடிகிறது. நாம் கர்த்தருடைய சமூகத்தில் வரும்போது நமக்கு எல்லாம் இருக்கிறது, குறைவு ஒன்றுமில்லை என நினைக்காமல் கர்த்தரிடம் நம்மை அர்ப்பணித்து முற்றிலும் நம்மைத் தாழ்மைப்படுத்தும்போது மறைவான பொக்கிஷங்களைத் தந்து நம்மை ஆசீர்வதிப்பார்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. J.விஜிலா ராணி
உதவி ஆயரம்மா - RAK.

# செயலர் மடல்

ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு பூட்டுகிறவருமாகிய தாவீதின் திறவுகோலையுடைய தேவாதி தேவனுக்கு மகிமையும் கனமும் புகழும் செலுத்துகிறேன்.

Corono virus மூலம் எங்கும் நிலைமாறிப்போன சூழ்நிலைகள் மத்தியிலும் தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் அனுகூலமான துணையுமாக கூடவே இருந்து பாதுகாத்து, பத்து மாதங்களைக் கடந்துவர கிருபை செய்துள்ளார். கர்த்தருக்கே மாட்சிமை உண்டாவதாக.

Chaplaincy-யின் வழிகாட்டுதலினாலும், நமது திருச்சபையாரின் ஊக்கமான ஜெபத்தினாலும், தேவனுடைய கிருபையாலும் Friday Service, Cell Prayers, Camp Ministries, Junior Church Ministries யாவும் வெகுசிறப்பாக online மூலம் நடைபெற்று வருவதற்காக கர்த்தருடைய மகா பெரிய கிருபைகளை எண்ணி நன்றி செலுத்துகிறேன்.

என்னோடே கூட online ஒளிபரப்பை நடத்த உதவி செய்யும் ஒவ்வொருவருக்காகவும் தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

வேலை இழப்புகள், பொருளாதார நெருக்கங்கள், குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புகள் மத்தியில் கடந்து செல்லும் சபையாருக்காகத் தொடர்ந்து பாரத்தோடு ஜெபிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அக்கினி சூளையின் நடுவில் பக்தர்களோடு உலாவின கர்த்தர் இந்நாட்களில் நம்மோடு கூடவே இருந்து திருச்சபையின் ஊழியங்களிலும், சபையாரின் வாழ்விலும் வழிகாட்டி, வழிநடத்தி பாதுகாப்பாராக.

ஜெயம் தரும் தேவாதி தேவனுக்கே மகிமை.

Babu Jeyaseelan, Secretary.

## NEW MEMBERS LIST

| No. | Name | M.No. | Place |
|---|---|---|---|
| 1 | Miss Dimpi Sheba Jainsingh | 2895 | Dubai |

## நற்செய்தியில் நடந்தது! ஆதியாகமத்தில் சொன்னது!!

யூதாவின் செங்கோல் மீதான எல்லை
யூதாவின் தந்தை யாக்கோபே சொல்ல
சமாதானக் கர்த்தர் வரும்வரை இல்லைதொல்லை
முன்னொரு தரிசனம் சொன்னதும் இல்லை

தீர்க்கர் வார்த்தை கர்த்தர் கருத்தாய்க்
கருதும் மக்கள் இருந்த காலம்
வார்த்தைப் பலிப்பும் தீர்க்கம் நம்பும்
மக்கள் மார்க்கம் கர்த்தர் பக்கம்

தாவீது வம்சம் யூதா கோத்திரம்
திணரித் தவிப்பில் ஏசாயா தரிசனம்
வேதப் பாதையில் கன்னிக் கர்ப்பமாம்
பிறப்பதும் மகனாம் பெயரும்இம் மானுவேலாம்

கர்த்தரின் கையாள் காபிரியேல் தூதன்
கலிலேய நாட்டில் நாசரேத் ஊரில்
தெரிந்தெடுத்த கன்னி தனித்திருந்தவர் முன்னாம்
அறிவித்துப் பூரித்தார் மரிமகிமைப் பிரதாபம்

திகைத்தார் மரியார் தெளிவித்தார் தூதுவர்
கர்த்தரால் ஆகும் ! ஆகா ததேது ?
அமைதி யாகி அமர்ந்தார் மரியார்
நடப்பதும் நடக்கப் போவதும் சிந்தித்தார்

யாக்கோபு கணிப்பு ஆக்கம் பெற்றது
ஆயிரத்து ஐநூறு ஆண்டுகள் கடந்து
யாக்கோபு முதிர்வயதில் மக்களுக்குச் சொன்னது
எதிர்கால வழிகாட்டல் முதன்முத லானது

இடுக்கத்தைக் கடக்க ஏசாயா சொன்னது
எண்ணூறு ஆண்டுகள் யாக்கோபுக்குப் பின்னது
திடப்பட்ட தாவீது சந்ததி கடந்துவந்தது
கலக்கம் விலக்கி நலம்பலம் மலர்ந்து

பெண்ணின் பெருமை மண்ணின்மகிமை யானது
சின்ன மரியை அன்னைமரி யாக்கியது
ஒண்ணாம் ஆண்டுக்குமுன் பத்தாம் மாதம்அது
ரெண்டாயிரத்து இருபது ஆண்டுகளைக் கடக்குது !

ஆதாரம் : ஆதியாகமம் 49:10; ஏசாயா 7:14; லூக்கா 1:26-41.
கவிதை எண் : 234 கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உனக்குத் தயைசெய்து, உனக்கு இரங்கி, அவர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டபடி உன்னை விருத்தியடையப் பண்ணுவார். உபாகமம் 13:18

இன்றைய...
காலகட்டம்
கலங்கவைக்கிறது
நடுங்கவைக்கிறது
நாளைய தினம்..
நலம் வருமா
பலம் தருமா?.. என
காரணம்...
கண்டு உணர
கடினமா?...
இல்லவே இல்லை
கை...
புண்ணுக்கு
கண்ணாடி தேவையா?...
அன்றைய
பாவங்கள்... இன்று
முளைத்துவிட்டதே!!
முன்னேறுவோம்
முன்னேறுவோம்.. என்று
வாதம் செய்து
பாதகம் செய்வது
சரிதானா?...
சொல்லாமல்
கொள்ளாமல்-வந்த
கொடிய
கொள்ளை நோயை...
தடுக்கமுடிந்ததா?..
விஞ்ஞானம்
விளக்கம் தந்ததா?..
பொய்ஞானத்தை
விட்டுவிட்டு
திரும்பி ஓடு...
புனித வேதாகமம் தந்த
மெய்ஞானத்தை
விரும்பித் தேடு.

பொருத்தனை...
தசமபாகம்...
கர்த்தருக்குக்
கீழ்படிதல்...
கர்த்தரின் வழிவிட்டு
விலகாமை...
கர்த்தரின்
கட்டளைகளையும்
நியாயங்களையும்
மீறாமை...
இவைகளே..
இன்றே...
இப்போதே...
கடைபிடிப்போம்...
அப்போது
கர்த்தரின்
கோபம்... திரும்பி
இரக்கம் வரும்
தயை வரும்
உபாகமம் 13:18-ல்
நம் முன்னோர்க்கு
ஆணையிட்டபடி
நமது...
விரக்திபோய்
விருத்தி
அடைவோம்...
ஜெபம்
இயேசுவையும்
இறைபக்தனையும்
இணைக்கும் பாலம்.
நெருப்பு
தன்னிடம்
வருவதை
சாம்பலாக்கும்

ஜெபமோ... நம்
பாவங்களையும்
கொடிய
வினைகளையும்
சாம்பலாக்கும்.
ஜெபத்தால்...
ஒருவரின்
உடல்
உள்ளம்
உணர்வு...
மூன்றும்
வீண்எண்ணம்
பேராசை
உலகப்பற்று
இவைகளிலிருந்து
விடுபடச்செய்து
மனம் தூய்மை
பெற்று சாந்தமாகி
கர்த்தரிடம்
லயித்துவிடும்...
அகத்திலும்
புறத்திலும்
இயேசுவின்
அருள்ஒளி
சுரந்து
உயர்பலன்
தந்துவிடும்...
நமது
பலவீனமான
நேரங்களில்
நமக்கு...
மகத்தான
வலிமையை
காணமுடியும்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# அறிந்து கொள்வோம்!

## கர்த்தருக்குப் பிரியமானது எது? கர்த்தருக்கு அருவருப்பானது எது?

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இவ்வுலகில் வாழும் நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குப் பிரியமாய் வாழவே விரும்புகிறோம். அவருக்குப் பிரியமானவை எவை எவை என்றும், அவருக்கு அருவருப்பானவை எவை எவை என்றும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயருக்கு எழுதின நிருபத்திலே 11-ம் அதிகாரம் 6-ம் வசனத்தில் “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்” என்றும் கூறுகின்றார். 13 ஆம் அதிகாரம் 16ஆம் வசனத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். “நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.”

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம் 2 ஆம் அதிகாரத்தில், 2 ஆம் வசனத்தில், “நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.” என்று தெளிவாக எடுத்துரைக்கின்றார். மேலும், 5 ஆம் அதிகாரத்தில் 4 ஆம் வசனத்தில், “விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேத்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது சொந்த குடும்பத்தைத் தேவ பக்தியாய் விசாரித்து, பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள். அது தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது.” என்கிறார்.

“பிள்ளைகள் தங்கள் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிவது தேவனுக்குப் பிரியமானது” என்று கொலோசெயர் 3:20 சொல்கிறது. “மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்” என்று ரோமர் 8:8 சொல்கின்றது. பழைய ஏற்பாட்டில் எசேக்கியேல் புத்தகத்தில் 18:23 இல் “துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தாராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.” என்று வாசிக்கலாம்.

நீதிமொழிகளின் புத்தகத்தில் 21 ஆம் அதிகாரம் 3 ஆம் வசனம் சொல்கின்றது, "பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்" என்றும், 12 ஆம் அதிகாரத்தில் 22 ஆம் வசனத்தில் "உண்மையாய் நடக்கிறவர்கள் அவருக்குப் பிரியம்" என்றும் சொல்கின்றது. ஆனால்...... கர்த்தருக்கு அருவருப்பான காரியங்கள் பற்றியும் நாம் தெரிந்திருக்கவேண்டியது அவசியம்.

- மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன். (நீதி. 3:32)
- கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது. (நீதி 11:1)
- மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். (நீதி. 11:20)
- பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். (நீதி. 12:22)
- துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது. (நீதி. 15:8)
- துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது. (நீதி. 15:9)
- துன்மார்க்கனுடைய நினைவுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். (நீதி. 15:26)
- மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். (நீதி. 16:5)
- துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். (நீதி. 17:15)
- வெவ்வேறான நிறைக்கல்லும், வெவ்வேறான மரக்காலும் ஆகிய இவ்விரண்டும் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். (நீதி. 20:10)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கர்த்தருக்குப் பிரியமாய் வாழ வேண்டுமானால், கர்த்தர் அருவருக்கிற அருவருப்பான காரியங்கள் நம் வாழ்வில் காணப்படக்கூடாது. நம்முடைய வாழ்க்கையை பரிசுத்தமாய் வாழவும், கர்த்தர் அருவருக்கிற காரியங்களின்று நம்மைக் காத்து சுத்த இருதயமுள்ளவர்களாய் நம்மை அவருக்குப் பிரியமான மணவாட்டியாய் வாழ நம்மை நாமே ஒப்புக்கொடுப்போம். தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து, பரிசுத்தப்படுத்தி, அவருக்குப் பிரியமாக மாற்றி, அவருடைய ராஜ்யத்தை அடையும் சுதந்தரவாளியாக மாற்றுவாராக. ஆமென்.

தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

# திருச்சபை ஜெபநாள் 01-11-2020 (முதல் ஞாயிறு)

"முழு இருதயத்தோடும் உம்முடைய தயவுக்காகக் கெஞ்சுகிறேன், உமது வாக்கின்படி எனக்கு இரங்கும்." சங்கீதம் 119:58

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- கர்த்தருடைய கிருபையால் காணொளிக் காட்சி, Team Meeting online மூலம், நமது திருச்சபை ஆராதனைகள், Junior Church மற்றும் ஊழியங்கள் யாவும் வெகுசிறப்பாக நடைபெறவும் கர்த்தர் நமக்குப் பாராட்டின தயவுகளுக்காக நன்றி கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- கொரோனா பாதிப்புகளிலிருந்து கர்த்தர்தாமே யாவரையும் பூரணமாய் விடுவித்து பாதுகாத்து நடத்திட தொடர்ந்து ஜெபிப்போம்.

"அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன்,
உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்." சங்கீதம் 119:147

**நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

# அன்னாள்

அற்புத தேவனின் கரத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரது செயல்பாடுகளை உலகில் நிறைவேற்றும் ஆயுதங்களாக இருக்கிறார்கள். அவ்வாறு தேவனின் திட்டத்துடன் இசைந்து பாய்ந்தோடும் வாய்க்காலாக இருந்தவர் அன்னாள். அன்னாள் என்றால் "கர்த்தரின் கிருபை" என்று பொருள். எல்கானாவின் இரண்டு மனைவிகளில் ஒருத்தியாகிய அன்னாளுக்குக் குழந்தை இல்லை.

### 1. பிரச்சனைகள் மத்தியில் ஆராதித்த அன்னாள்:

தேவன் மனிதனைப் படைத்த முக்கிய நோக்கம் அவரை ஆராதிக்கவே. பிரயாண வசதிகள் இல்லாத காலத்தில் சேனைகளின் தேவனைப் பணிந்து கொள்ளவும், அவருக்குப் பலியிடவும் சீலோவிற்கு குடும்பத்தினருடன் நீண்ட தூரம் வந்து ஆராதித்தாள். தேவ சமூகத்தில் செல்லும் சமயத்தில் கூட தன்னை விசனப்படுத்தும் சக்களத்தி பெனின்னாளின் உபத்திரவம், குழந்தையின்மை என நொண்டிச் சாக்கு சொல்லி குடும்பத்தோடு போகாமலிருந்திருக்கலாம். வாழ்வின் குறைபாடு, மனக்கிலேசங்கள் அன்னாள் ஆராதிப்பதைத் தடுக்கவில்லை. கர்த்தருடைய பரிசுத்த நாளை அசட்டை பண்ணக்கூடாது.

### 2. தன் கணவனுக்குப் பிரியமான மனைவி:

தனது பிள்ளையில்லாத பிரச்சனை தனக்கும் தன் கணவனுக்கும் இடையில் பிரச்சனையை உருவாக்க இவள் இடமளிக்கவில்லை. தன் குறைவுகளை, பலவீனங்களை, சக்களத்தியின் குத்தல் பேச்சுகளை கணவன் மீது கொட்டி வீட்டின் அமைதி, சமாதானத்தைக் குலைத்து விடாமல் நாவடக்கத்தோடு சகித்துப் பொறுமை காத்து, தன் கணவனுக்குப் பிரியமான மனைவியாயிருந்தாள். அன்னாள் அழும்போதெல்லாம் இரக்கமாய் கண்ணீர் துடைத்து விசாரித்து பரிவுடன் பேசினான். பத்துக் குமாரரைப் பார்க்கிலும் நான் உனக்கு அதிகம் அல்லவா என தேற்றியதுமல்லாமல், பலிப் பொருட்களிலும் இரட்டிப்பான பங்களித்து தன்னுடைய அன்பை அவளுக்கு வெளிப்படுத்தினான்.

### 3. அன்னாளின் ஜெபம்:

பல வருடம் சிறுமைப்படுத்தப்பட்ட அன்னாளுக்கு தேவசமூகம் இளைப்பாறுதலையும், நம்பிக்கையையும் தந்தது. அழுதும், மனமுடைந்தும், சாப்பிட மனமற்றுமிருந்த அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றினாள். தன்னை ஆண்டவரிடம் உமது "அடியாள்" என ஒப்படைத்தாள். ஒரு குழந்தையைத் தாரும் எனவும், அது ஆண் குழந்தையாக இருக்க வேண்டும் எனவும் ஆரவாரம் இல்லாமல் கண்ணீருடன் மனபாரங்களைக் கொட்டினாள். அப்புறம் அவள் துக்க முகமாயிருக்கவில்லை. பல வருடம் தனித்து கவனிப்பாரற்று, வேதனையில் விம்மிக் கொண்டும், அழுது கொண்டும் இருக்கிற சூழ்நிலையில், நமது பிரச்சனைகளை நம்மை நேசிப்பவர்களிடம் கூறுவதை விட அன்பர் பாதம் ஊற்றினால் சரீர மனக் காயங்களைக் குணமாக்கி, சூழ்நிலைகளை மாற்றுவார். விசுவாசத்தை நம் வார்த்தையில் காட்டவேண்டும். அன்னாள் குடித்து வெறித்திருப்பதாக ஏலியால் தப்புக் கணக்கு போடப்பட்டதுபோல, மற்றவர்கள் புரிந்து கொள்ளாமல் ஏளனம் செய்தாலும் இடைவிடாத ஜெபம் ஏறெடுங்கள். கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற மீட்பரைச் சோராமல் பின் செல்வோம்.

### 4. தேவ திட்டத்தோடு இசைந்த அன்னாள்:

தேவ திட்டமும் தீர்மானமும் தம் அநாதி நோக்கத்தை அன்னாள் மூலம் நிறைவேற்ற, அவள் ஜெபிக்க, மன்றாட அவசியமுண்டாக்கினார். நெருக்கத்தில் தேவனை அண்டிக் கொள்வதே தேவசித்தம். தான் ஆராதிக்கப் போகும் இடத்தில் மக்களுக்கு தேவபோதனை இல்லை. தேவசித்தத்தோடு இசைந்து, "தேவரீர் ...ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன் ... என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்"(1சாமு. 1:11). நம் வாழ்வும் பிறருக்கு ஆசீர்வாதமான பாய்ந்தோடும் வாய்க்காலாக மாறட்டும். பாடுகளின்றி மகுடமில்லையே. தேவசமூகத்தில் ஜெபிக்கும் வாய்ப்பு பெற்ற பெனின்னாள் அதைப் பிரயோஜனப்படுத்தவில்லை.

### 5. அன்னாளின் மகிழ்வும், கடமையும்:

விண்ணப்பத்தைக் கேட்ட தேவன் கொடுத்த சாமுவேல் என்னும் பிள்ளையை பொருத்தனையை மறவாமல் ஆலயத்தில் கொண்டு வந்து சேர்த்தாள். தேவனை நம்பி விட்டுச் சென்றவள் ஒவ்வொரு வருஷமும் ஒரு சிறிய சட்டையை தைத்துக்கொண்டு வந்து பரிசளித்தாள். வாக்கு மாறாத தேவனுக்குத் துதி பாடலையும் அவர் பாதம் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறாள். தேவ சமூகத்தில் கொடுத்த வாக்கை நிறைவேற்றுகிறோமா? மலடியை அநேகம் பெறப்பண்ணினாரே! கர்த்தரைத் துதியுங்கள்! அவர் நல்லவர்!

### 7. அன்னாளின் சந்ததி பெற்ற ஆசீர்வாதம்:

அன்னாளின் மகனாகிய சாமுவேல் மூலம் கர்த்தரின் வார்த்தை தேசத்தாருக்குத் திரும்பவும் வந்தது. சிறுவனாயிருக்கும்போதே கர்த்தர் அவனிடம் வந்து பேசினார். தரிசனம் தந்தார். பலி செலுத்தும் ஆசாரியனாக, உத்தம நியாயாதிபதியாக, ஒரு தீர்க்கதரிசியாக இஸ்ரவேலிலே விளங்கினார். இஸ்ரவேலின் முதல் ராஜா சவுலையும், தேவனுக்குப் பிரியமான ராஜா தாவீதையும் அபிஷேகம் பண்ணினவரும், ராஜாங்கத்தின் முறையை ஜனங்களுக்குத் தெரிவித்து, அதை புஸ்தகத்தில் எழுதி கர்த்தருடைய சந்நிதியில் வைத்தவரும் சாமுவேல்தான். ஜனங்களுக்காகத் திறப்பிலே நின்று போராடின ஜெப வீரனுமாயிருந்தான். விசுவாசப்பட்டியலிலும்(எபி 11:32) சாமுவேலின் பெயர் இடம் பெற்றுள்ளது.

